[2011 பிப்ரவரி 10

10. எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி கோரியது குறித்து

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், முதலிலே தொடங்குகிறபோது, வழிபாட்டிலே தொடங்கி, முடிக்கிறபோது கோரசிலே முடித்தார்கள். அவர்களுக்கு அது பழக்கமான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள், இந்த ஆட்சி போய்விட வேண்டும். எதிர்க்கட்சியாக இருக்கிற அவர்கள் ஆளுங்கட்சி வரிசையில் வந்து அமர வேண்டும் என்று தெரிவித்ததுடன், அதுவும் அவர்களுடைய தலைவி அம்மையார் அவர்கள் முதலமைச்சராக வரவேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, அந்த ஆசையோடு தன்னுடைய பேச்சை முடித்திருக்கிறார்கள். அவர் ஆசைப்படுவது தவறல்ல. அதை நிறைவேற்றித் தரவேண்டியது பொது மக்கள். செய்வார்களா என்பது கேள்விக்குறி. (மேசையைத் தட்டும் ஒலி)*

இன்னும் ஒன்று, அவர் ஆசைப்படுவது. ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறவரை முதலமைச்சராக ஆக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார். முதலில் ஓய்வு முடிந்தல்லவா? அரசியலிலே, ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதாக அவர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னதை மறுப்பதற்கு இதில் ஒன்றுமில்லையே? (குறுக்கீடுகள்) சொன்னதில் ஒன்றும் தவறில்லையே? இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். நேரமில்லை,* please. *ஏதாவது கேட்க வேண்டுமென்றால் பின்னர் கேளுங்கள்.*

பிற்பகல் 12-55

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *இந்த அவையில் நிறைவேற்றிய தீர்மானத்தை நான் ஏற்றுப் பேசுவதை, உங்களுடைய கட்சியின் தலைவர் . . . (கூச்சல்-குழப்பம்) அது உங்கள் இஷ்டம். (கூச்சல்-குழப்பம்) அது உங்கள் இஷ்டம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செங்கோட்டையன், உங்களுக்கு நான் மைக் கொடுக்கவில்லை. எல்லோரும் உட்காருங்கள்.* Please, *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)*

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியவர்கள், எதற்காக அந்தத் தீர்மானம்? ஓய்வு எடுத்துக் கொள்வதற்குத்தான். *(கூச்சல்-குழப்பம்)* சொன்னதை சொன்னால் உங்களுக்கு என்ன கடுப்பு? *(கூச்சல்-குழப்பம்)* அந்தத் தீர்மானத்திலே இந்த வாசகம் இல்லையென்றால், என்னுடைய வாசகத்தை நான் திரும்பப் பெறுகிறேன். *(குறுக்கீடுகள்)* அப்படி அந்தத் தீர்மானம் இல்லையென்றால் நான். . . *(குறுக்கீடுகள்)* தீர்மானத்திலே என்ன இருக்கிறது என்று படித்துப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நான் சொல்வதைக் கேளுங்கள். தீர்மானத்திலே இருக்கிற வார்த்தையை அவர் சொல்லியிருக்கிறார். *(குறுக்கீடுகள்)* Nothing. உட்காருங்கள். தீர்மானத்திலே அதுதானே இருக்கிறது? *(கூச்சல்-குழப்பம்)* தீர்மானத்திலே இருக்கிற வார்த்தையைச் சொல்வது ஒன்றும் தவறு இல்லையே? *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு காரசாரமாகப் பேசவேண்டுமோ அவ்வளவும் பேசினார்கள். இது ரௌடிகள் ஆட்சி என்று சொன்னபோதுகூட நாங்கள் சும்மா, அமைதியாக உட்கார்ந்திருந்தோம். ஆனால், நீங்கள்தான் அம்மா ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். அந்த ஓய்வு என்பது தவறான வார்த்தையல்ல. ஓய்ந்த நேரத்தில் போவதல்ல. ஓய்வு என்பது ஓய்ந்த நேரத்தில் போவதல்ல. ஓய்ந்த நேரத்தில் ஓய்வு எடுப்பது என்பது rest எடுப்பது. அதென்ன தவறா? Is it unparliamentary, is it unparliamentary? No, you can't expunge the word. If the word is unparliamentary, then only the Speaker can expunge it. It is not unparliamentary. You are threatening on the last day, ஒன்றை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள், இங்கு ஒருவர்கூட திரும்பி வரமாட்டீர்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானத்திலே இருக்கிற வாசகம், உடல்நலக் குறைவு காரணமாக பூரண ஓய்வு எடுத்துக் கொள்வதற்கு என்பது, இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்தது நீங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓய்வு எடுப்பது தவறா? இதில் என்ன இருக்கிறது? உழைத்தவர்கள் ஓய்வு எடுப்பார்கள். இதிலே என்ன இருக்கிறது? இதிலே தவறான அர்த்தம் என்ன இருக்கிறது? (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். உழைத்தவர்கள் ஓய்வு எடுப்பார்கள், அதுதானே உண்மை? (கூச்சல்-குழப்பம்) இதோ பாருங்கள், நான் தீர்மானத்தை வாசிக்கிறேன், கேளுங்கள். வாசிக்கிறேன் கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) நீங்கள் கொடுத்த தீர்மானத்தை நான் வாசிக்கிறேன், கேளுங்கள்.

"தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவரைப் பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ள நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20 (1)-ன்கீழ் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்" என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் முன்மொழிந்தார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தை திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வழிமொழிந்தார்கள்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு அந்தத் தீர்மானம் சபையிலே ஒட்டுமொத்தமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதில் என்ன இருக்கிறது? உங்களுடைய வேண்டுகோள் அதுதானே? (குறுக்கீடுகள்) இதோ பாருங்கள் — "தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும்" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான என்று திரு. ஓ. பன்னீர்செல்வம் கொடுத்திருக்கிறார் — "உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால், பூரண ஓய்வு எடுக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதன் காரணமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது'' (குறுக்கீடுகள்) இப்படித்தானே சொல்லியிருக்கிறீர்கள்? (கூச்சல்-குழப்பம்) இது உண்மையா, இல்லையா? இது உண்மையா, இல்லையா? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்த வேண்டுகோள் உண்மையா, இல்லையா? எல்லோரையும்

2011 பிப்ரவரி 10]   [பேரவைத் தலைவர்]

உட்காரச் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள், (குறுக்கீடுகள்) ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அது ஒரு unparliamentary word இல்லையே?

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சுரிமையை நீங்கள் தடுக்க முடியாது. பெங்களூரு நீதிமன்றத்தில், உங்களுடைய கட்சித் தலைவர், பெங்களூரு நீதிமன்றத்திற்குப் போக முடியாததற்காக, அந்த நீதிமன்றத்திலே தெரிவித்த வார்த்தையில், தமிழகச் சட்டமன்றத்திலே அவர் ஓய்வு பெறுவதற்குத் தீர்மானம் கொடுத்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அங்கேயே சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) அதை நான் சொல்லாமல், யார் சொல்வது? (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான்தான் சொல்ல வேண்டும். உங்களுக்குத் தலைவராக இருக்கலாம். ஆனால், சட்டமன்றத்தில் அவர்கள் உறுப்பினர்தான். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மணி நேரம் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேசிவிட்டு, வேண்டுமென்றே இந்த அவை நடக்காத அளவுக்குத் திட்டமிட்டு சதி செய்கிறார்கள். எனவே, ஒன்று அவர்களை வெளியேற்றவேண்டும், இல்லையென்றால் இந்தச் சட்டமன்றம் ஒழுங்காக நடைபெறுவதற்கு நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், ஒரு மணி, 10 நிமிடங்கள்--70 நிமிடங்கள் பேசியிருக்கிறார். உறுப்பினர்கள், கொஞ்சம் ஒத்துழைப்புக் கொடுங்கள். பட்ஜெட்டை நிறைவேற்றவேண்டும். முதலில் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) It is not an unparliamentary word. அதிலே என்ன உங்களுக்கு உஷ்ணம் ஆகிறது? எனக்குப் புரியவில்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்) ஓய்வு எடுக்கிறார்கள் என்று சொல்வதில் தவறு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)

மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக உட்காருங்கள் please. எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். Please, எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவரவர் இருக்கையில் அமருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி. ஜெயக்குமார், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) போக முடியாது என்று சொல்லக்கூடாது. உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். அவரவர் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவரவர் இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் உடல்நலக் குறைவு ஏற்பட்டிருப்பதால், இந்தக் கூட்டத் தொடருக்கு வர முடியாது என்ற காரணத்தால் நான் அந்தத் தீர்மானத்தை இங்கு முன்மொழிந்தேன். (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். பேச விடுங்கள். அது இந்தக் கூட்டத் தொடர் முடியும் வரைக்கும்தான். தற்காலிக ஏற்பாடாகத்தான் நாங்கள் அந்த அனுமதியை வேண்டினோம். அதை அரசியல் ஆக்குகின்ற விதத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கின்ற ஒருவர் எப்படி என்பதுபோல ஆரம்பித்தார்கள். அதைத்தான், தேவையில்லாதது, அவைக் குறிப்பிலிருந்து நீக்குங்கள் என்று சொல்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரை நான் குறைவுபடுத்துவதற்காக அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், எல்லோரையும் மதித்து நடந்துகொள்ளச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த மாதிரியெல்லாம் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

2011 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது, இந்த அவையில் முதலமைச்சர் இருக்கையிலே, அந்த அம்மையார், எதிர்க்கட்சித் தலைவர் வந்து அமரக்கூடிய அளவிற்கு ஒரு நிலை வரும் என்று அவர் பேசினார். இங்கு ஆளுங்கட்சியாக உள்ளவர்கள் இந்த இடத்தைவிட்டு எதிர்க்கட்சியிலே போய் அமர்வார்கள் என்ற எண்ணத்தையும் அவர் தெரிவித்தார். அப்படித் தெரிவித்தபோது ஓய்வுபெற்றுக் கொண்டிருப்பவரே அந்த நிலையைப் பெற முடியுமானால், இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றவர், அந்த நிலையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதா? என்றுதான் நான் கேட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-இலிருந்து 2006 வரை ஐந்தாண்டுக் காலம் மாண்புமிகு முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். இந்த சபைக்கே வரவில்லை. அவர்களே முதலமைச்சராக வரும்போது, எங்களுடைய அம்மா சபைக்கு வந்து இங்கே நிறைய பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் முதலமைச்சராக வர முடியாது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன வார்த்தையிலே தவறு இல்லை. அவ்வளவுதான். யார் யாருக்கு, என்னென்ன நோக்கம் இருக்கிறதோ, அந்த நோக்கத்திலே அந்த வார்த்தையை எடுத்துக்கொள்வதைப் பற்றி எனக்கு வருத்தம் இல்லை.

இந்த விலைவாசியைப் பற்றி அந்த அம்மையாரே ஓர் அறிக்கையிலே தெரிவிக்கின்றபோது, விலை உயர்விற்கான காரணங்களை நிதிநிலை அறிக்கையில் பட்டியலிட்டிருப்பது வருத்தமளிக்கிறது என்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது அவருக்கு ஏற்ப ஒரு தொனியிலே கருத்தினை வெளிப்படுத்தினார்கள். ஓய்வு பெறுவோர்கள் வெற்றி பெறமுடியும் என்றால், நாங்கள்

எல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இனி எதிர்காலத்தில் முழுமையாக நீங்கள் ஓய்வுபெறப் போகிறீர்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதைப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், அதெல்லாம் மக்கள் முடிவு செய்ய வேண்டியது. இப்போது அதுபற்றி ஏன் பேசுகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு தூரம் எதிர்க்கட்சி வலியுறுத்தினாலும், அந்த வார்த்தையை நிதியமைச்சர் அவர்களும், நீங்களும் வாபஸ் பெறாத காரணத்தினாலே சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். (கூச்சல்-குழப்பம்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. ல. ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. க. இராஜேந்திரன் தவிர) அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. டி. ஜெயக்குமார், திரு. கோ. அரி, திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் நிதிநிலை அறிக்கை புத்தகங்களை வீசியெறிந்து சென்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் நிதிநிலை அறிக்கை புத்தகத்தை வீசியெறிந்த செய்கை கண்டிக்கத்தக்கது. இம்மாதிரியாக அவையை அவமதிக்கின்ற வகையில் அவர்கள் நடப்பது வருந்தத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 1-10

9. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2011–2012, பொது விவாதமும் பதிலுரையும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதன்மூலமாக நிரந்தரமாக இந்த அவைக்கு நாங்கள் வரமுடியாதவர்களாக ஆகிவிட்டோம் என்பதை ஒப்புக்கொண்டு,*